# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 17 இதழ் - 7 ஜூலை- 2004



வெளியீட்டாளர்

கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.


தமிழ்நாடு. இந்தியா

© 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை .......... 1
2. புதிய பிறப்பை நாம் ஏன் பிரசங்கிக்கிறோம் .......... 10
3. பெண்கள் பகுதி .......... 14
4. வாலிபர் பகுதி .......... 17
5. II போதுரு ஒரு கண்ணோட்டம் .......... 21
6. சிறுவர் பகுதி .......... 22
7. விசுவாசத்தின் அடிப்படைகள் .......... 24
8. தேவ ஒத்தாசை வேண்டுமா ? .......... 30

# THIRUMARAI AASAAN

*Published by Church of Christ*

S. Rajanayagam — *Editor*

J.C. Choate — *Honorary Editor*

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 17 JULY - 2004 Issue - 7


ஆசிரியர் உரை

# பானையிலே சாவு இருக்கிறது

**ஏ**தேன் தோட்டம் துவங்கி, மனிதனுக்குத் தொல்லை கொடுத்து, தொடர்ந்து துரத்தி பயமுறுத்தி வரும் ஒரு பிரச்சனை தான் சாவு அல்லது மரணம். இதன் கோரப்பிடிக்கு யாரும் தப்ப முடியாதாகையால், இதைப் பற்றிய பயம் எல்லோருக்கும் எப்போதுமே இருந்து வந்துள்ளது. எனக்கு மரண பயம் இல்லையென்று, ஒருவேளை வெளியே ஒருவன் சொன்னாலும், உள்ளூர அப்பயம் இருக்கவே செய்யும். இப்படி மனிதனைப் பயமுறுத்திப் பணிய வைத்திருக்கிற சாவு எதிலே ஒரு மனிதனுக்கு இருக்கிறது அல்லது எப்படியிருக்கப் போகிறது என்று சொல்லுவது முடியாத ஒன்று, மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சி அசுர வேகத்தில் சென்று, விண் முட்டியிருக்கும் இந்த நாட்களில் கூட அதை யாராலும் கணித்துச் சொல்ல முடிவதில்லை.

உண்மை நிலை இப்படியிருக்கும் போது, **"பானையிலே சாவு"** இருக்கிறது என்று நான் எழுதினால், அது உங்களுக்குத் தமாஷாகவே இருக்கும். அதுமாத்திரமல்ல, மலையேறிப் போய்விட்ட மண்பாண்டங்களை இன்னும் நினைத்துப் பேசிக் கொண்டிருக்கும் ஊழியரும் நீங்கள் தான் என்று மனதுக்குள்ளாகிலும் நகைப்பீர்கள். அப்படித்தானே. என்னைப் பொருத்தளவில், நம்முடைய கையிலிருக்கும், எக்காலத்துக்கும் ஏற்ற வேதாகமம் பானையைக் குறித்துப் பேசுகிறபடியால் நானும் பேசுகிறேன். அவ்வளவுதான். அதுமாத்திரமல்ல, அந்தப் பானை சம்மந்தப்பட்ட காரியம் நமக்கு சில பாடங்களைக் கற்றுக்கொடுக்க முடியும்

என்று நம்புகிறேன், ஆகவே அது பற்றி எழுதுகிறேன். மற்றபடி வேறொன்றும் இல்லை. என் பேச்சுக்கும், என் எழுத்துக்கும் முழு முதல் அடிப்படை, நமக்கு இவ்வாழ்வில் வழிகாட்டியாயிருந்து, ஒரு நாளில் நம்மை நியாயந்தீர்க்கும் வேதாகமம் தான் (யோவா 12:48) ஆம், வேதாகமமேயன்றி வேறொரு ஆகமம் இல்லை. அதைப்பற்றி எழுதுவதேயன்றி பிறிதொரு நோக்கமுமில்லை.

சரி, இந்தப் "பானைச் சாவை" சரியாக விளங்கிக் கொள்வதற்கு, இது பற்றிய பின்னணியை, நாம் நம்முடைய வழக்கத்தின்படியாகக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

பழைய ஏற்பாட்டுப் பிரபலங்களில் எலிசா என்ற ஒரு தேவமனிதனை நாம் எல்லோரும் ஓரளவுக்காகிலும் அறிவோம். அநேகராகிய நாம் அவனை ஒரு தீர்க்கதரிசி என்றும், பல பேர் இன்னும் கொஞ்சம் விபரமாக அவனை ஓர் "அற்புதத் தீர்க்கதரிசி" என்றும் தெரிந்து வைத்திருக்கிறோம். இந்த இரண்டுமே உண்மை தான். ஆயினும், நாம் அறியாத இன்னொரு சிறப்பும் இவனுக்குண்டு. பரிசுத்த வேத எழுத்துக்களைக் கவனமாகப் படிப்பவர்களுக்கு மாத்திரம் இது தெரிய வரும். அது, அவன், ஒரு வேதாகம ஆசானாகவோ அல்லது வேதாகமப் பள்ளியின் நிர்வாகியாகவோ இருந்திருக்க வாய்ப்புண்டு என்பது.

ஆம், எலிசாவின் நாட்களில், தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கான வேதாகமப் பள்ளிகள் ஆங்காங்கே இருந்திருக்கிறதாகவே தெரிகிறது. அதன் மூலம், தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு, அவர்கள் போதிப்பதற்கும், பிரசங்கிப்பதற்குமான பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கும் போலும் தெரிகிறது. நம்முடைய தலைப்பிற்கான வேதப்பகுதி இடம் பெற்றிருக்கும் II ராஜா 4:38-41 வசனப்பகுதியில், எலிசா, கில்காலுக்குத் திரும்பி வந்திருக்கையில், **"தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள்"** (4:38) என்று வசனம் கூறுகிறது. இங்கு மாத்திரமல்ல, 2-ம் அதிகாரத்திலும் கூட, பெத்தேலிலிருந்த **"தீர்க்கதரிசிகளின் புத்திரர்"** எலிசாவினிடத்தில் வந்து: இன்றைக்கு கர்த்தர் உனக்குத் தலைமையாயிருக்கிற உன் எஜமானை உன்னை விட்டு எடுத்துக் கொள்வார் என்பது உனக்கு தெரியுமா? என்று கேட்டுள்ளனர் (2:3) இன்னும், அடுத்த இரண்டு வசனங்கள் தள்ளி **"எரிகோவிலிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர்"** அவனை வந்து சந்தித்தார்கள் என்றும் பார்க்கிறோம் (2:5). அடுத்து 6:1-ல், "தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி....." என்றுள்ளது. இவைகளெல்லாம், அந்நாட்களில் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு ஏதோ விசேஷித்த ஓர் ஏற்பாடு இருந்திருக்கிறதையே காட்டுகிறது. இந்த வழக்கம் சாமுவேல் தீர்க்கனின் நாட்களிலேயே தொடங்கிவிட்டதென்றும் நம்ப வாய்ப்புள்ளது. "...... அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின்

கூட்டத்தையும், சாமுவேல் அவர்களின் தலைவனாக நிற்கிறதையும் கண்டார்கள்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (I சாமு 19:20).

ஆக, இந்தப்படியாக, கில்காலில் இருந்த, தீர்க்கதரிசிகளுக்கான ஒரு பள்ளியை அவன் பார்வையிடவோ அல்லது போதிக்கவோ வந்த சமயத்தில் தான், நமது தலைப்புக்கான சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அவன், கில்காலுக்கு வந்த அந்த நாட்கள் பஞ்ச நாட்கள் (வச 38) ஒருவேளை காலம் பஞ்சகாலமாக இருந்தாலும் கர்த்தருடைய காரியம் எவ்விதத்திலும் தடைபடாமல் நடந்திருக்கிறது. ஆம், எலிசா வந்தபோது, தீர்க்கதரிசிகளின் புத்திரர் அவனுக்கு முன்பாக உட்கார்ந்து தேவகாரியங்களைக் கேட்டிருக்கிறார்கள் (வச 38) பஞ்சமோ, பசியோ பட்டினியோ தேவ காரியத்திற்குத் தடையேற்படுத்த முடியவில்லை யென்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். தீர்க்கதரிசிகளின் புத்திரரின் இச்செயல், பவுலடியார் ரோமாபுரியாருக்கு "**கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன்**" யார்? என்று எழுதின வசனங்களை நமக்கு நினைவுபடுத்துகிறது (ரோம 8:36-39)

ஆவிக்குரிய ஆகாரத்தைத் தேடுபவர்களின் சரீரக் களைப்பை போக்க ஆகாரம் அளித்த நமது ஆண்டவர் போல், எலிசாவும் தேவ சத்தத்தைக் கேட்கும்படி அமர்ந்திருக்கும் தீர்க்கதரிசிகளின் புத்திரரின் சரீரக் களைப்பைப் போக்க "கூழ்" காய்ச்சும்படி வேலைக்காரனுக்கு உத்தரவிட்டான் (வச 38). கூழ் காய்ச்சுவதற்குக் கீரை வகைகளையும் சேர்க்கும் பழக்கம் அன்றைக்கு இருந்ததால் கீரைகள் பறிக்க ஒருவன் வெளியே சென்றான். அப்படிப் போனவன், அறியாமல், "**பேய்க் கொம்மட்டிக் கொடிகளை**" மடி நிறைய அறுத்து வந்து, அவைகளை அரிந்து கூழ்பானையிலே போட்டான். இங்கே நன்றாக கவனியுங்கள். அறுத்து வந்தவனுக்கோ, அதை அரிந்தவனுக்கோ, அதை பானையிலே போட்டவனுக்கோ, "**அது இன்னதென்று தெரியாதிருந்தது**" (வச 39).

பிறகு, சாப்பிட அதை தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு கொடுத்த போது, அதை அவர்கள் சாப்பிடக் கூடாமல், "**தேவனுடைய மனுஷனே, பானையிலே சாவு இருக்கிறது**" என்று கண்டு சத்தமிட்டார்கள் (வச 40). அப்பொழுது, இந்த அற்புதத் தீர்க்கதரிசியாகிய எலிசா, "..... மாவைக் கொண்டு வரச் சொல்லி, அதைப் பானையிலே போட்டு, ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு வார் என்றான்; அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற் போயிற்று (வச 41).

இங்கே, நான்கே நான்கு வசனங்களைக் கொண்ட இந்த வேத பகுதி, நம்முடைய ஆன்மீக வாழ்க்கைக்கு என்ன பாடம் கற்றுக் கொடுக்கிறதென்று கவனிப்போம்.

## I தோற்றத்தைக் கண்டு ஏமாந்து போக வாய்ப்புண்டு :-

இந்தப் பானைச் சாவு நமக்குக் கற்றுக் கொடுக்கின்ற முதல் பாடம், "தோற்றத்தைக் கண்டு ஒருவன் ஏமாந்து போக வாய்ப்புண்டு", ஆகவே ஒருவன் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்பது.

கூழ் காய்ச்சுவதற்குக் கீரைகளைப் பறிக்க சென்றவன் கொண்டு வந்த பேய்க் கொம்மட்டிக் கொடி, தான் பறித்த மற்ற பல நல்ல கீரைகளைப் போன்றே தோற்றமளித்திருக்கிறது. தோற்றம் வித்தியாசமாக இல்லாததால், அதுவும் நல்ல கீரை தான் என்று கொண்டு வந்து, அவைகளை அரிந்து, பானையிலே போட்டான். ஆனால், அது உண்மையில் நல்லதாக இராமல் நச்சுத் தன்மை கொண்டதாக இருந்திருக்கிறது.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? நல்லவைகளாகத் தெரிகிறவைகள் எல்லாமே நல்லவைகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை. வெளிப்புறமான தோற்றமோ அல்லது புறக்கண்களாலே காணக்கூடியவைகளோ அல்லது மேலோட்டமாகப் பார்க்கும் போது தெரிந்து கொள்ளக் கூடியவைகள் மட்டுமோ ஒன்று நல்லதா அல்லது கெட்டதா என்று தீர்மானிப்பதற்குப் போதுமானதாகாது, அப்படிப் போதுமானதாக இருந்திருந்தால், "அந்தப் பானையிலே சாவு" இருந்திருக்க வேண்டிய அவசியமோ அல்லது எலிசா அதைச் சரிசெய்ய வேண்டிய அவசியமோ இருந்திருக்காது.

இந்த உண்மையை அப்படியே ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு அணுகிப் பார்ப்போம். ஒட்டு மொத்த ஆன்மீக உலகத்தை நாம் கவனித்துப் பார்த்தால், மோசமாகத் தோன்றாத எதுவுமே நல்லது தான். அவைகளை ஏற்றுக்கொள்வதிலோ அல்லது அதின்படி செய்வதிலோ தவறில்லை என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. ஆன்மீக உலகின் பல அவலங்களுக்கு அடிப்படையே இப்படிப்பட்ட சீரழிவுச் சிந்தை தான்.

அருமையானவர்களே, நம்மைச் சுற்றிலும் இருக்கும் பல மத நம்பிக்கைகள், பக்தி பரவசம் பூண்டு, பார்ப்பதற்கு பரவாயில்லை என்பது போல் தோற்றமளித்தாலும், அவைகள் அனைத்துமே நல்லவைகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதுபோலவே, இயேசு கிறிஸ்து, வாக்குத்தத்தம் செய்து, (மத் 16:18), தமது இரத்தத்தைச் சிந்தி (அப் 20:28) சம்பாதித்த ஒன்றான மெய்ச் சபைக்கு மாறாக, இன்றைக்கு விநோதமான பெயர்களால் ஏராளமாகப் பெருகிவரும் எண்ணிலடங்கா சபைப் பிரிவுகள், பக்தி முறையில் நன்றாகத்தானே இருக்கிறார்கள் என்று நினைக்கும்படியான நிலை நம்முடைய அறிவுக்குத் தென்பட்டாலும், அவைகள் சத்திய வசனத்தின்படி சரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதுபோலவே, ஊழியம் என்ற பெயரில் வேதாகமத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு, போதிக்கிறவர்கள் எல்லோரும், இயேசுவைப் பற்றித்தானே

போதிக்கிறார்கள் என்று சொல்லும்படியாக இருந்தாலும், அவர்கள் போதிக்கின்ற எல்லாமே, புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டத்தின்படி சரியானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இன்னும், ஞாயிறுதோறும் ஆங்காங்கே கூடி ஆராதிக்கிற அனைவரும் தேவனைத்தானே ஆராதிக் கிறார்கள், அதிலே குறை சொல்ல என்ன இருக்கிறது என்பது போல எண்ணத் தோன்றினாலும், ஆராதனை என்ற பெயரால் நடப்பவைகள் எல்லாமே "ஆவியோடும், உண்மையோடும்" (யோவா 4:24) ஏறெடுக்கப் படும் ஆராதனையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. பார்ப்பதற்கு நன்றாகத்தானே இருக்கிறதென்று ஒன்றை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டால், அதற்கான விலையைக் கொடுத்தே ஆக வேண்டும். பேய்க் கொம்மட்டியை நல்ல கீரை என்று ஏற்றுக் கொண்டதன் விளைவு, "சாவிலே" முடிந்தது. பார்வைக்கு இன்பமாக இருக்கிறதென்று ஏவாள் கண்டு ஏமாந்து கனியைப் புசித்ததன் விளைவு ஆவிக்குரிய மரணத்திலும், சரீர மரணத்திலும் போய் முடிந்தது. (ஆதி 3:36).

தோற்றம் நன்றாக இருக்கிறதென்பதற்காக, பார்ப்பதற்கு சிறப்பாக இருக்கிறதென்பதற்காக, ஆவிக்குரிய நிலையில் நாம் எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதற்கு இச்சம்பவம் ஒரு சரியான உதாரணம். அப்படியானால், நாம் எப்படி செயல்பட வேண்டுமென்பதற்கு, தேவன் பவுலடியாரைக் கொண்டு கொடுக்கும் ஆலோசனையை கவனியுங்கள். "எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்". (I தெச 5:21) இப்படி நாம் சோதித்துப் பார்த்து, ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டால், ஆவிக்குரிய மரணத்தைத் தவிர்க்க முடியும்.

**<u>II நோக்கம் நன்றாக இருந்தாலும் அது தவறாகப் போய்விட வாய்ப்புண்டு:-</u>**

பானைச் சாவு சம்பவம் நமக்குக் கற்றுக் கொடுக்கின்ற இரண்டாவது பாடம், நல்ல நோக்கத்தோடு ஒரு காரியம் செய்யப்பட்டதென்பதற்காக, அது நியாயமாகிவிடாது என்பது.

கீரைகளைப் பறிக்கப் போனவன், தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு சிறப்பான கீரைகளைக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணித்தான் அந்த பேய்க் கொம்மட்டிக் கீரையையும் பறித்தான். ஆசையோடு பறித்து, மடி நிறையக் கொண்டு வரவும் செய்தான். கொண்டு வந்தவைகளை அரிந்தவனும், அதை அடுப்பிலே போட்டு காய்ச்சினவனும், தீர்க்கதரிசியின் புத்திரரை சீக்கிரம் பசியாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தான் எல்லாவற்றையும் செய்தனர். மனதிலே கெடுதி நினைக்கவும் இல்லை, செயலில் அப்படிக் காட்டவும் இல்லை.

ஆனால், நோக்கம் நன்றாக இருந்ததென்பதற்காக, அவர்கள் செய்த காரியத்திற்குண்டான விளைவு அங்கு இல்லாமல் போய் விட்டதா?

இருந்தது தானே. தாங்கள் செய்த காரியம் தங்களுக்கு மாத்திரமல்ல, தங்களோடிருந்தவர்களுக்கும் ஒரு பெரிய பாதிப்பைக் கொண்டு வந்தது தானே! சொல்லுங்கள். ஆமாம், என்பது உங்கள் பதிலானால், தவறான காரியங்களை, ஆவிக்குரிய வாழ்வில் சாவைக் கொண்டு வரத்தக்கதான காரியங்களை நாம் ஏன் இன்னும் செய்து கொண்டிருக்க வேண்டும்?

நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டாலும் தவறு, தவறுதான் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் "ஊசா" என்ற மனிதனின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் I சாமு 6-ம் அதிகாரத்தில் நாம் இதைக் காணலாம். அங்கே மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில், ஆடலோடும், பாடலோடும், ஆர்ப்பாட்டத்தோடும் கொண்டு செல்லப்பட்ட தேவனுடைய பெட்டி, நாகோனின் களம் அருகே வந்த போது, மாடுகள் மிரண்டு பெட்டி அசைந்தபடியால், ஐயோ, தேவனுடைய பெட்டி சாய்கிறதே என்று, "நல்ல நோக்கத்தோடு" தன் கையை நீட்டி அதைப் பிடித்தான். தேவன் அவனை உடனே அடித்தார். அவன் செத்துப்போனான். (IIசாமு 6:5-7). நோக்கம் நல்ல நோக்கமே, ஆனாலும் "ஆள் அவுட்". ஏன், என்ன காரணம்? அங்கு நடந்ததைப் புரிந்துகொள்ள நாம் சிறிது சிரமப்பட்டாலும், தேவன் தமது நீதியின்படியாகவே செயல்பட்டுள்ளார். ஆம், உடன்படிக்கைப் பெட்டியை, கோகாத்தின் புத்திரர் தான் தங்கள் தோள்களில் சுமந்து வரவேண்டும். அதை மற்றவர்கள் தொடக்கூடாது என்பது தேவக்கட்டளை (4:15) அந்த தேவகட்டளை அங்கு மீறப்பட்டது. அதை மாட்டு வண்டியில் கொண்டு சென்றார்கள். அது முதல் தவறு. இரண்டாவது, தொடக்கூடாது என்ற கட்டளை மீறப்பட்டது. ஊசா தொட்டான், நோக்கம் சரி, ஆனால் செயல் தவறு. விளைவு தேவகோபம், ஆகையால், நமது காரியம், தேவ அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நோக்கம் மட்டும் சரியாக இருந்தால் போதாது, செயலும் செம்மையாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால், மரண அடிதான்.

இக்கருத்தை அப்படியே நம்மைச் சுற்றி நடைபெறும், ஆன்மீக காரியங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். குறிப்பாக ஆன்மீக உலகின் **நல்ல நோக்கத்தோடு நடைபெறுகிற தவறுகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்** வேதத்தில் சொல்லப்படாத "**பண்டிகைக் கொண்டாட்டம்**" என்கிற தவறு, வேத வசங்களை அவமதிக்கிற "**பாரம்பரியம்**" என்கிற தவறு, வேத வசனங்களை மீறுகிற "**சுய இஷ்டமான ஆராதனை**" என்கிற தவறு கிறிஸ்துவின் உபதேசத்தை உதாசீனப்படுத்துகிற, "**இரட்சிக்காத இரட்சிப்பின் திட்டம்**" என்கிற தவறு, கிறிஸ்து இரத்தம் சிந்தின நோக்கத்தையே பாழ்படுத்துகிற உபதேசமாகிய, "**சபை முக்கியமல்ல**" என்கிற தவறு போன்றவைகள், ஒருவேளை, நல்ல நோக்கத்தோடும், அறியாமையோடும் செய்யப்பட்டாலும், அவைகள் நிச்சயமாகவே சத்தியத்தின்படி

தவறானவைகளே. தவறானவைகளைச் செய்யும் போது, அதற்கான விளைவைச் சந்திக்க வேண்டியவர்களாகவும், தண்டனையை அனுபவிக்கிறவர்களாகவும் இருந்தே ஆக வேண்டும் யாரும் தப்ப முடியாது.

பானைச் சாவு சம்பவமும், ஊசாவின் மரணமும் நமக்கு அதைத் தான் சொல்லுகிறது. ஆகையால், மிகுந்த ஜாக்கிரதையாக நம்முடைய ஆன்மீக வாழ்வில் காரியங்களைச் செய்வோமாக!.

## III தீமை கண்டுபிடிக்கப்பட்டு, சீர்படுத்தப்பட்டால் தப்பிக்க வாய்ப்புண்டு :-

"பானைச் சாவு" சம்பவம் நமக்குக் கற்றுக் கொடுக்கிற மூன்றாவது பாடம், தீமை சரியான நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, சரி செய்யப்பட்டால், தப்பிக்க வாய்ப்புண்டு என்பது.

பேய்க் கொம்மட்டிக் கொடி போடப்பட்டு காய்ச்சப்பட்ட கூழைக் குடித்த தீர்க்கதரிசிகள் தவறு நடந்து விட்டதை உடனே கண்டுபிடித்து, "தேவனுடைய மனுஷனே, "பானையிலே சாவு இருக்கிறது" என்று சத்தமிட்டார்கள். அப்பொழுது அற்புதங்கள் பல செய்த இந்த பேராசிரியர் தீர்க்கதரிசி, மாவைக் கொண்டு வரச்சொல்லி, தோஷம் நீங்கும்படி செய்து, சாப்பிடும்படி செய்தான் (வச 41).

இங்கே, தீர்க்கதரிசிகளின் புத்திரரின் செயல்பாட்டை நாம் கவனிக்க வேண்டும். தங்களுக்கான ஆகாரம் கொடுக்கப்பட்ட போது, **அது சரியான முறையிலே தயார் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை சோதித்து, தவறைக் கண்டுபிடித்துள்ளனர்.** அதுமாத்திரமல்ல, தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்தவுடனே அதைச் சாப்பிட மறுத்து, அதைச் சரி செய்யும்படியான முயற்சியை எடுததுள்ளனர். கிடைத்ததே பெரிது என்று நினைத்து, நொறுங்கப் பிடித்து, தங்கள் பசியை ஆற்றிக் கொள்ள நினைக்கவில்லை.

சரி, நான் இங்கே ஒன்றைக் கேட்கிறேன். நம்மில் எத்தனை பேர், நம்முடைய ஆத்தும ஆகார காரியத்தில் இந்த தீர்க்கதரிசிகளின் புத்திரரைப் போல் உள்ளோம்? கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள் பார்க்கலாம். நம்முடைய ஆன்ம வாழ்வுக்காகக் கொடுக்கப்படும் பிரசங்கங்கள், வேதவசனங்களின் முழு ஆதாரத்தோடு தான் தயார் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது பேய்க்கொம்மட்டி போன்ற மனித உபதேசங்கள் கலந்திருக்கிறதா என்று கண்டுபிடிக்கக் கூடியவர்களாக உள்ளோமா? நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க, வேத வாக்கியங்களை "ஆராய்ந்து" பார்க்க வேண்டுமென்று தேவன் சொல்லுகிறார் (யோவ 5:39) இன்னும், "உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால்

உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்றும் சொல்லியுள்ளார் (I யோவா 4:1) அதுமாத்திரமல்ல, பெரோயா பட்டணத்தார், மானோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப் 17:11) நம்முடைய ஆன்ம வாழ்வுக்காகச் சொல்லப்படும் எல்லாவற்றையும் நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் எங்கும் நமக்குக் கட்டளை கொடுக்கவில்லை.

தீர்க்கதரிசிகளின் புத்திரர் செய்த மற்றொரு காரியம், தவறு கண்டுபிடிக்கப்பட போது, சாப்பிட மறுத்து, **தவறைச் சரி செய்யும்படியாக தேவனுடைய மனிதனிடம் முறையிட்டனர்.** எலிசா ஒரு பெரிய தீர்க்கன், அற்புதங்கள் செய்யும் தீர்க்கன். நமக்கு ஆசானாகவும் இருக்கிறார். ஆகவே, அவரிடம் போய், அவர் கொடுத்த ஆகாரத்தில் தவறு நடந்துவிட்டது என்று எப்படிச் சொல்லுவது? அப்படிச் சொன்னால் அவர் ஏதாவது நினைத்து விட்டால் என்ன செய்வது? என்றெல்லாம் நினைக்காமல், "தேவனுடைய மனுஷனே, பானையிலே சாவு இருக்கிறது". என்று தங்களுக்குள் மாத்திரம் கசா முசா என்று பேசிக் கொள்ளாமல், சத்தமிட்டுச் சொன்னார்கள். இப்படிப்பட்ட தைரியம் இன்றைக்கு எத்தனை கிறிஸ்தவர்களிடம் இருக்கிறது? சத்தியத்திற்காக நாம் நமது வாயைத் திறக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

இன்றைக்கும், அநேகராகிய நாம், நம்முடைய ஆன்மீக வாழ்வில், "சாவு" இருக்கிறதென்று தெரிந்தும், அதாவது, நித்திய ஜீவனுக்கு நம்மை நடத்தாது என்று தெரிந்தும், அதையே தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டுள்ளோம். ஆனால், அந்த தீர்க்கதரிசிகளின் புத்திரர், அதைச் சரி செய்யும்படியாகக் கேட்டுப் பிறகு, சாப்பிட்டுள்ளனர். அதன் மூலம், எதிர் நோக்கியிருந்த சாவிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர்.

அங்கே நாம் கவனித்தால், பானையிலே போடப்பட்ட எல்லாக் கீரையும் மோசமானதாக இல்லை. ஒரே ஒரு கீரை தான் நச்சுத் தன்மையுடன் இருந்தது. ஆனால், சாவைக் கொண்டு வருவதற்கு, அந்த ஒன்று போதுமானதாக இருந்தது. மறந்து விடாதீர்கள். என்வாழ்வில், ஒரு குறையை அல்லது பாவத்தைத் தவிர எல்லாம் சரியாக இருக்கிறது என்றோ, அல்லது என் விசுவாச வாழ்க்கையில் ஒரு காரியத்தைத் தவிர மற்றவைகளை அப்படியே செய்து கொண்டிருக்கிறேன் என்றோ அல்லது நான் கலந்து கொள்ளும் சபையில்ஓர் உபதேச காரியத்தைத் தவிர மற்றவைகளை உண்மையாகவே செய்கிறார்களென்றோ அல்லது என் இரட்சிப்பு

விஷயத்தில் ஒன்றைத் தவிர மற்றவைகளை நான் சரியாகவே நிறைவேற்றியிருக்கிறேன் என்றோ எண்ணி திருப்திப்பட்டுக் கொள்ளாதீர்கள். அன்றைக்கு எப்படி சரீர சாவுக்கு ஒரே ஒரு கீரை போதுமானதாக இருந்ததோ அதுபோல், நம்முடைய ஆன்மச் சாவுக்கும் ஒரே ஒரு கீழ்ப்படியாமை போதுமானது. ஆகவே, நாம், ஏனோதானோ என இருந்து ஏமாந்து போகக் கூடாது.

அருமையானவர்களே, ஆதிப் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் ஏதேனை விட்டும், தேவ சமூகத்தை விட்டும் துரத்தப்படுவதற்கு எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒன்று தான்! தேவமனிதனாகிய மோசே கானானனுக்குள் பிரவேசிக்க முடியாமல் போனதற்கு எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒன்று தான். இயேசுவின் சீடனாக இருக்கும் பார்க்கியம் பெற்ற யூதாஸ், அழைப்பை இழந்து போய், நான்று கொண்டு சாகவும், அதன் மூலம் நித்திய ஆக்கினை அடையவும் எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒன்று தான்.

ஆகையால், எனக்கன்பானவர்களே, நாம் "ஒரு பாவம் தானே என்று இறுமாந்து இருக்காமல், நம்முடைய ஆன்மீக வாழ்வின் பாவங்களை இனம் கண்டு, அவைகளை உடனடியாகக் களைந்து போட்டு, நித்திய அழிவிலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்வோமாக ! ஆமென்.

**E.Z.S. ராஜநாயகம்.**

<u>**பேதுருவின் வாழ்க்கையில்...**</u>

| பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் | பெந்தெகொஸ்தே நாளுக்கு பின் |
|---|---|
| கிறிஸ்து அவரை அழைத்தார். | பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கம் செய்தார். |
| மறுரூப மலையில் மூவரில் ஒருவர் | அற்புதங்கள் செய்தார். |
| கெத்சமனே தோட்டத்திற்கு போகும் போது மூவரில் ஒருவர். | அனனியா, சப்பீராள் விஷயத்தைக் கையாண்டார். |
| மூன்று முறை இயேசுவை மறுதலித்தார். | புறஜாதிகளுக்கு கதவை திறந்தார். |
| உயிர்த்தெழுந்த பின்பு மூன்று முறை என்னை நேசிக்கிறாயா என்று இயேசு இவனிடம் கேட்டார். | ஒரு முறைக்கு மேலே சிறை சென்றார். |
| | பவுலால் கடிந்து கொள்ளப்பட்டார். |
| | 67-68-AD-ல் மரித்துப் போனார். |

# புதிய பிறப்பை நாம் ஏன் பிரசங்கிக்கிறோம்

**பு**திய பிறப்பு என்றால் என்ன? அது ஒரு நல்ல கேள்வி. உண்மையில், அக்கேள்வி பலமுறை கேட்கப்பட்டும், பலவிதமான பதில்கள் அதற்கு கொடுக்கப்பட்டும் இருக்கிறது. ஆனாலும், அக்கேள்விக்கு இன்னும் அநேகர் பதிலை அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

நம்முடைய பிரிவினை சபை நண்பர்கள், இதை ஒரு மனிதனின் வாழ்வில் நடக்கும் அற்புதமான மாற்றம் என்றும், அவன் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதை அது குறிக்குமென பதில் தருவார்கள். ஆனால் அதற்கும் மேலான ஓர் அர்த்தத்தை அது கொண்டதாக நிச்சயம் இருக்கிறது.

நாம் யோவான் மூன்றாம் அதிகாரத்திற்கு நம்முடைய கவனத்தை திருப்பினால், அங்கு இயேசுவானவர் புதிய பிறப்பைப் பற்றி பேசுவதை காணமுடியும். இது, கிறிஸ்து மரிப்பதற்கு முன்பாக நடந்தது என்றும், அது சட்டமாக்கப்படுவதற்கு முன்பாக இது நடந்தது என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், இது கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்துவின் பிரமாணம் அமலுக்கு வந்தால் என்ன செய்யப்பட வேண்டும் என்பதை முன்னதாகவே சொல்லும் ஒரு பகுதியாகும். இது சபை அல்லது ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக சொல்லப்பட்டது. ஆனால், சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு ஒருவன் அதில் பிரவேசிக்க மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியமாகும்.

இப்பொழுது புதிய பிறப்பைப் பற்றி நாம் வாசிப்போம், யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு; ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ

என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார், அதற்கு நிக்கொதேமு; இவைகள் எப்படி ஆகும் என்றான், இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை, பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக் கிறவருமான மனஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை (யோவா 3:1-13).

நாம் படித்ததிலிருந்து என்ன நடந்தது என்பதை கவனியுங்கள். நிக்கொதேமு எனப்பட்ட ஒருவன் இரவிலே இயேசுவிடம் வந்தான். சிலரோ அவன் பரிசேயனாக இருந்ததாலும், யூதருக்கு அதிகாரியாக இருந்ததாலும், அந்த வருகையை அவன் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று இப்படி செய்ததாக சொல்லுகிறார்கள். பரிசேயர்கள், யூதமார்க்கத்தின் ஒரு பிரிவினர். அவர்கள் உயிர்த்தெழுதலும், தேவதூதரும் உண்டென்று விசுவாசிக்கிறார்கள். அவன் யூதருக்கு அதிகாரியாக இருந்தான் என்றால், அவன் ஒரு இஸ்ரவேலில் மூப்பனாக, கனத்திற்கும் மரியாதைக்கும் உரிய ஒருவனாக இருந்திருக்கிறான். அவன் இயேசுவிடம் வந்து, அவரை ரபீ என்று அழைத்தது, அவர் செய்த அடயாளத்தைப் பற்றி பேசி, தேவன் உம்முடன் இல்லை என்றால் இப்படி செய்யமுடியாது என்று சொன்னது எல்லாம் அவன் அவர்மேல் விசுவாசம் வைத்ததைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இயேசு அவனிடம் பார்த்து, ஒருவன் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால் அவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று

சொல்கிறார். இதைக் கேட்டு நிக்கொதேமு ஆச்சரியப்பட்டு இயேசு என்ன சொல்கிறார் என்பது புரியாமலிருந்தான். அவன், வயது சென்ற ஒருவன் எப்படி மறுபடியும் பிறக்க முடியும் என்பதை அறிய ஆவலாக இருந்தான். பிறக்க வேண்டுமென்றால் தாயின் கர்ப்பத்தில் ஒருவன் இரண்டாம் முறை எப்படி சென்று பிறப்பது என்று அவன் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தான். நாம் நிச்சியமாக அப்படி செய்ய முடியாது, இயேசு அப்படி போதிக்கவுமில்லை. இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி பேசினார், ஆனால் இவனோ சரீரப்பிரகாரமாக பிறத்தலைக் குறித்துப் பேசுகிறான், அவன் அதை மட்டும் அறிந்திருந்தான்.

இயேசு தொடர்ந்து மறுபடியும் பிறத்தலைப்பற்றி விளக்குகிறார். அநேக வார்த்தைகளால் அதை அவர் அவனுக்கு விளக்கினார், ஒருவன் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறந்தால்தான் தேவனுடைய ராஜ்யத்தை காணமுடியுமென்றும் அவர் திட்டமாக கூறினார்.

இந்த வார்த்தைகளை நாம் இன்னும் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம். முதலாவது, ஒருவன் ஜலத்தினால் பிறக்க வேண்டும் என்பதை கவனியுங்கள். பிறக்க வேண்டும் என்றால் வெளிவர வேண்டும். பிறப்பு என்பது புதிய ஜீவனைக் குறிக்கிறது, ஆனால், இங்கே தண்ணீரைப் பற்றி என்ன? இது சரீரப்பிரகாரமான பிறப்பு அல்ல. ஏனென்றால், இயேசு, நிக்கொதேமுவிடம் தாயின் கர்ப்பத்தில் ஒருவன் மீண்டும் சென்று பிறப்பதைப் பற்றி பேசவில்லை.

நாம் தண்ணீர் என்ற பதத்தைப் பார்க்கும் போது, இன்னொரு காரியத்தையும் மனதில் கொள்ள வேண்டும். ஆவிக்குரிய தண்ணீரை குறிக்கிறதாக இருந்தால் அவ்விடத்தில் ஜீவதண்ணீர் என்றோ அல்லது வார்த்தையே இடம் பெற்றிருக்கும். ஆனால் தண்ணீர் என்ற வார்த்தை இடம் பெற்றிருக்கும் போது, அது உண்மையான தண்ணீரைக் குறிக்கும். சரி, இங்கு அது என்ன அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது? தண்ணீர் என்ற வார்த்தை மாத்திரம் வந்திருப்பதால் உண்மையான தண்ணீரைப் பற்றி பேசுகிறது என்று அர்த்தம். நாம் அடுத்ததாக கேட்க வேண்டிய கேள்வி தண்ணீரோடு தொடர்புடைய வேறு என்ன கட்டளையை நாம் வேதத்தில் வாசிக்கிறோம் என்பது தான்? நீங்கள் கர்த்தருடைய வார்த்தையில் அதிக பழக்கமுள்ளவர்கள் என்றால் இதை நன்றாக அறிந்திருப்பீர்கள். அதாவது தண்ணீரோடு சம்பந்தப்படுத்தப்பட்ட கட்டளை அல்லது செயல் ஞானஸ்நானம் என்று. அப் 8:26-39 வரை உள்ள வசனத்தில், எத்தியோப்பியாவிலிருந்து வந்த ஒரு மனிதனுக்கு கிறிஸ்துவைப் பற்றி போதிக்கப்பட்டு, தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதை நாம்

அறிந்திருக்கிறோம். இன்னுமாக, கிறிஸ்து ஒருவன் தண்ணீரினால் பிறக்க வேண்டும் என்றார். ஒருவன் எப்படி ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்றால், நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் செய்யப்படுவது என்று (கொலோ 2:12) அது தண்ணீருக்குள் அடக்கம் என்பதால், அத்தண்ணீரிலிருந்து ஒருவன் வெளிவருகிறான் அல்லது பிறக்கும் அனுபவத்தை அவன் பெறுகிறான். பவுல், அதுதான் ஞானஸ்நானத்தில் நடப்பதாக விளக்குகிறார் (ரோம 6:34)

தொடர்ந்து, நாம் தண்ணீரால் பிறப்பது பற்றி அல்லது ஞானஸ்நானத்தைப் பற்றி சிந்திக்கும் போது அது வெளிவருதல் என்றும் புதிய ஜீவனைப் பற்றியது என்றும் அறிகிறோம். ஏன் என்றால் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:3 மற்றும் கலாத் 3:26, 27-ல் அப்படி அதை சொல்லி விட்டு, ஒருவன் கிறிஸ்துவை ஞானஸ்நானத்தின் போது தரித்துக் கொண்டு புதிய சிருஷ்டியாக இருக்கிறான் என்றார். மேலும் பவுல் சொல்லும் போது இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2கொரி 5:17) என்றார். கிறிஸ்தவர்களைப் பற்றி பேசும் போது பேதுரு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சை யாயிருங்கள் (Iபேதுரு 2:3) என்கிறார்.

(தொடரும்)

***J.C. Choate*** J.C. சோட்

## தெசலோனிக்கேயரில்

| இயேசு | பாவ மனுஷன் |
| --- | --- |
| 1. இயேசு வருகையில் வெளிப்படுவார் (2:19) | 1. பாவமனுஷனும் வெளிப்படுவான் (2:19) |
| 2. அற்புதம் செய்தார் (அப் 2:22) | 2. பொய்யான அற்புதங்களைச் செய்தான். (II தெச 2:9) |
| 3. இவர் தேவன் (எபி 1:8) | 3. தேவனைப் போல் தன்னைக் காட்டிக் கொண்டவன் (II தெச 2:4) |
| 4. தேவனுடைய சபையின் தலைவர் (எபி 3:6) | 4. தன்னை தேவனுக்கு மேற்பட்டவனாய் காட்டிக் கொள்ளுகிறான். (II தெச 2:4) |
| 5. மகிமைப் பெற்றவர் (II தெச 1:10) | 5. அழிக்கப்படுவான். (II தெச 2:8) |

**பெண்கள் பகுதி**

# ஒரே சிந்தை

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே! நம்முடைய வாழ்க்கையில் இன்னுமொரு மாதத்தைக் கூட்டிக் கொடுத்த பரலோக தேவனுக்கு கோடான கோடி நன்றி, துதிகளை ஏறெடுப்போம். கல்வியாண்டின் துவக்கமாகிய சென்ற மாதத்தில், பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக அலைந்த அலைச்சல், பொருளாதார செலவு, மன உளைச்சல் இவைகளின்று விடுபட்டு இருக்கும் இந்த மாதத்தில் தேவன் நம்மிடம் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கும் **"ஒரே சிந்தையைப் பற்றி"** தேவதத்தின் துணைகொண்டு சற்று ஆராய்வோம்.

"சிந்தை" என்பது மிகவும் முக்கியமானது. எப்படியெனில் மனிதனை **அவன் யார்** என்று காட்டுவது அவன் சிந்தைதான். நம் செயல் தேவனுக்கு பிரியமாயிருக்க வேண்டுமானால், முதலாவது நம்முடைய சிந்தை சுத்தமாயிருக்க வேண்டும். அப்படியானால் நமக்கு எப்படிப்பட்ட சிந்தை இருக்கிறது? வேதாகமம் சொல்லுகிறது, **"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது"** என்று (பிலிப் 2:5) அப்போஸ்தலனாகிய பவுல் இந்த பிலிப்பு பட்டணத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பித்தார் என்று அப் 16-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அதுவும் லீதியாள் என்ற பெண் தான் அங்கு முதல் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவள். இச்சபை அப்போஸ்தலனாகிய பவுலினால் மிகவும் நேசிக்கப்பட்ட சபை. இந்த நிருபத்தை பவுலடியார் சிறையிலிருந்து எழுதுகிறார். பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன், எபேசியர் நான்கும் சிறை நிருபங்கள் என்றழைக்கப்படுகின்றன. அப்போஸ்தலானாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்துவின் சபை விசுவாசிகளை அந்த அளவு நேசித்தாரோ எந்தளவு விசுவாசிகளும் பவுலடியாரை நேசித்தது, உதவியும் செய்துள்ளனர் பிலி 4:15 முதல் 18 வரை உள்ள வசனப் பகுதிகளில் பவுலே இதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பிலிப்பியர் புஸ்தகத்தில் "சிந்தை" என்ற வார்த்தை 7 முறையும், ஒரே சிந்தை 2 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிந்தையை வலியுறுத்தும் பவுல் யாருடைய சிந்தை சிறந்தது, பின்பற்றக்கூடியது என்ற கேள்விக்கு பதிலாக **"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை"** என்று திட்ட வட்டமாக கூறியிருக்கிறார். கிறிஸ்துவின் சிந்தை என்றால் என்ன? கிறிஸ்துவின் சிந்தையை எடுத்து கூறப்போனால் அவருடைய பல பண்புகளை அடுக்கிக்கொண்டே போகலாம். கிறிஸ்து இயேசுவின் தாழ்மை, அன்பு, இரக்கம், பொறுமை, தயவு, மன்னிப்பு, கீழ்ப்படிதல்,

தியாகம் என்று அடுக்கிக் கொண்டேயிருக்கலாம். அனைத்து நல்ல சிந்தனைக்கும் பிறப்பிடம் நம் இயேசு கிறிஸ்து மட்டுமே.

நமதாண்டவர் இயேசுவின் அனைத்து சிந்தனைகளிலும் நமது தியானத்துக்காக தாழ்மை, கீழ்ப்படிதல், ஆகிய இரண்டைப் பற்றி மாத்திரம் பார்ப்போம்.

## தாழ்மை :-

பிலிப் 2:6-8 வசனப்பகுதிகள் இயேசுவின் தாழ்மைக்கு மிகச் சிறந்த உதாரணம். தேவனுக்கு சமமாயிருப்பதை அவர் விரும்பவில்லை. அடிமையின் ரூபம் தமக்கு போதும் என்று தீர்மானித்தார். தனக்கு கிடைக்கும், அல்லது கிடைத்த பதவியை ஒருவன் இழப்பதென்பது சாதாரண விஷயமல்ல. இயேசு செய்தார். அவர்தான் நம் இயேசு ரட்சகர். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நமக்கு வேண்டும். எல்லா அதிகாரமும் பெற்றிருந்த அவர் தான் சீஷர்களின் பாதங்களை கழுவினார். தாழ்மைக்கு பூரண உதாரணம் அவர்தான். (யோவா 13:8)

பிரியமானவர்களே, மனமேட்டிமை வேண்டாம். மேட்டிமையான கண் நமக்கு தேவையில்லை (நீதி 6:16,17) மனமேட்டிமை கர்த்தருக்கு அருவருப்பு. அப்படிப்பட்டவர்கள் தண்டனைக்கு தப்பமாட்டார்கள் (நீதி 16:5) உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தேவன் ஒருவனை தாழ்த்தி விடக்கூடாது. என்வே, நாமே நம்மை தாழ்த்திக் கொள்ளவேண்டும். "ஏற்ற காலத்தில் உயர்த்தும்படி அவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருங்கள்" என்று I பேதுரு 5:5,6 வசனங்களில் வாசிக்கிறோம். தாழ்மையுள்ளவர்களுக்கு என்ன பலன் கிடைக்கும்? கிருபையளிக்கிறார். எப்படி கிருபையை பெற்றுக்கொள்ள முடியும். தன்னை தாழ்த்துவதனால், எப்போது தாழ்த்த வேண்டும்? எப்பொழுதும் தாழ்த்தினால் ஏற்ற நேரத்தில் உயர்த்தப்படுவோம். மேன்மை பாராட்டுதலை அறவே அகற்றி விடுவோம். நமக்கிருக்கும் ஞானம், பராக்கிரமம், ஐசுவரியம் இவைகளைப்பற்றி மேன்மை பாரட்ட வேண்டாம். மாறாக, கிருபை, நியாயம், நீதி, இவைகளை செய்கிற கர்த்தரை உணர்ந்திருப்பதே ஒருவனுக்கு பெருமையாக இருக்க வேண்டும். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து மரணபரியந்தம் தம்மை தாழ்த்தினார். இயேசுவின் மரணம் கொடூரமானது. அவர் **முகங்குப்புற விழுந்து** ஜெபம் பண்ணினார் (மத் 26:39) ஏன்? தாழ்மை, வியாகுலம், வேதனை இவை மூன்றும் ஒன்று சேர்ந்து விட்டதால் அவர் முகங்குப்புற விழுந்தார். நாம் இவ்வாறு ஜெபித்திருக்கிறோமா? நமக்கு இப்படி அனுபவமுண்டா? இயேசுவைப்போல் தாழ்மையின் சிந்தையை அணிந்து கொள்வோம்.

**கீழ்ப்படிதல் :**

வானோர், பூதலத்தோர் யாவருடைய முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்க வைத்தது இயேசுவின் கீழ்ப்படிதல் குணம். மரண பரியந்தம் கீழ்ப்படிதல், இதுதான் முக்கியம். நம்முடைய கீழ்ப்படிதல் ஏதோ நம்மை வழிநடத்துகிறவர்கள் பார்வைபடும்போது, கஷ்டம் வரும்போது, கூட்டங்களில் பங்கேற்கும் போது இருக்கிறது. மற்ற சமயங்களில் வசனங்களுக்கு கீழ்ப்படிவதில்லை. பட்டபாடுகளினாலே அவர் கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டார் (எபி 5:8) குமாரரானாயிருந்தும் பாடுபட்டார், கீழ்ப்படிந்தார். அந்த மாதிரி சிந்தை நமக்கு அவசியம், பாடு ஒரு கிறிஸ்தவனுக்கு தேவை. பாடுபட்டால் தான் பங்காளிகளாக முடியும். பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் இயேசு ஜெபித்தார். நாம் ஜெபம் எவ்வாறு இருக்கிறது?. சபை வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும். பாடு இல்லையானால், சபை வளர்ச்சியும் இல்லை.

விசேஷமாக பெண்களாகிய நமக்கு கீழ்ப்படிதல் அவசியம். ஆதியிலிருந்து இது தேவனால் எதிர்பார்க்கப்படுகிறது. மனைவிகள் கீழ்ப்படிய வேண்டும் (Iபேது 3:1) சிலருக்கு கீழ்ப்படிதல் என்பதே பிடிக்காது. இதனால் எத்தனை குடும்பங்கள், பிரிந்து விடுகிறது. இன்றைக்கு கீழ்ப்படியாத சிந்தையால் சபையிலும் பிரிவினைகள் வந்துவிடுகிறது. கீழ்ப்படிதல் இல்லையென்றால் பிரிவினைதான்

பழைய ஏற்பாட்டின் காலத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் தங்களை ஆளாதபடிக்கு ராஜா வேண்டுமென்று கேட்கிறார்கள் (Iசாமு 8:7) அதுபோல இன்னும் சில மனைவிகள் புருஷன் தங்களை ஆண்டுகொள்ள அனுமதியளிப்பதில்லை. புருஷனையும் அவமதித்து, தேவனின் கட்டளையையும் அவமாக்குகிறார்கள். மகிழ்ச்சி, அமைதி கெட்டு குடும்பங்கள் சீரழிகிறது. தாயின் கீழ்ப்படியாமை பிள்ளைகள் வழியாக குடும்பத்தில் சீரழிவைக் கொண்டு வருகிறது.

இயேசு கிறிஸ்து, ஒரு போதும் பிதா தன்னை ஆண்டுகொள்ள அனுமதி கொடாமல் இருந்ததில்லை. அவர் மட்டும் கீழ்ப்படியாமல் இருந்திருப்பாரானால் **இரட்சிப்பின் திட்டமே** இல்லாமல் போயிருந்திருக்கும்.

ஆக, தாழ்மை, கீழ்ப்படிதல் ஆகிய விலையேறப்பெற்ற சிந்தைகளைப் பற்றி பார்த்தோம். இவைகளை இயேசு கொண்டிருந்தார். அந்த சிந்தையை நாமும் பெற்றுக்கொள்வோம்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருந்தால் நம்முடைய தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சபை வாழ்க்கை எல்லாமே ஆசீர்வாதமாக அமையும், இந்த சிந்தை தான் நம்மை பாரலோகத்திற்கு அழைத்துச் செல்லும். எனவே அவருடைய சிந்தைகளை அணிந்து கொள்வோம். ஆமென்.

**ரேச்சல் ராஜநாயகம்.**

வாலிபர் பகுதி

# கழுவினேன் காண்கிறேன்

ஆர்ப்பரிக்கும் அலை கடலையும், விண் முட்டும் மலைமுகடுகளையும், நெடிதுயர்ந்து வளர்ந்து மாந்தருக்கு நிழல்தரும் தருக்களையும், அகிலத்தையும் ஆகாயத்தையும், அவ்வாகாயத்தில் பறக்கும் பறவைகளையும், ஆழியின் அடியில் அலைந்து திரியும் மீன் இனங்களையும், உங்களையும் என்னையும் உண்டாக்கின தேவன், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கக் கூடாது என்ற அவருடைய கட்டளையை மீறியதால் பாவம் என்னும் படுகுழியில் விழுந்த மனுக்குலத்தை மீட்க மனதாயிருந்தார். அந்த மீட்பை சாத்தியமாக்க, நரர் உலகில் மனிதனாக அவதரித்து, நன்மைகள் பல செய்து சுற்றித் திரிந்து, கல்வாரி சிலுவையில் தன் உயிர் துறந்து, மூன்றாம் நாள் வேதவாக்குப்படி வேதாளம் நமக்கு பரிசாக தந்த மரணத்தை ஜெயித்தெழுந்த இயேசுபரனின் ஒப்பில்லாத திருநாமத்தினால் உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பரலோகத்தின் தேவன் நம்மோடு உறவாட சித்தமுள்ளவராக இருந்து ஆதி காலங்களில் நேரிடையாகவும், தீர்க்கதரிசிகளை கொண்டும் திருவுளம் பற்றினார், ஆனால், இப்பொழுது உலகம் அனைத்திற்கும் தமது சித்தத்தை வெளிப்படுத்தும் படியாக தமது வேதத்தை எழுத்து வடிவில் கொடுத்துவிட்டார். சங்கீதக்காரன் அவ்வேதத்தைப் பற்றி தன்னுடைய ஆவலை வெளிப்படுத்தும் போது, "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி, என் கண்களைத் திறந்தருளும்" (சங் 119:18) என்கிறார். நாமும் கூட அவரைப் போல நமது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படும்படி, முதலில் இயேசுகிறிஸ்துவால் சரீரக்கண்கள் திறக்கப்பட்டு பின்பு ஆவிக்குரிய கண்களும் திறக்கப்பட்ட ஒருவனிடமிருந்து கற்றுக்கொள்ள முயற்சிப்போம் வாருங்கள்.

## அவனுடைய விசுவாசம்

யோவான் எழுதின நற்செய்தி நூலின் 9ம் அதிகாரத்தில் இவ்வற்புதம் நடப்பதை நாம் வாசித்து தெரிந்துகொள்ளலாம். யோவான் தன்னுடைய நூலில் கலிலேயாவில் நடந்த 4 அற்புதங்களை கூறுகிறார்: தண்ணீரை திரட்சைரசமாக மாற்றியது (யோவா 2) ராஜாவின் மனுஷனின் குமாரன் வியாதியை சுகப்படுத்துதல் (யோவான் 4) ஐயாயிரம் பேரை போசித்தல் மற்றும் தண்ணீர் மீது நடத்தல் (யோவான் 6) அத்தோடு யூதேயாவில் நடந்த 4 அற்புதங்களையும் கூறுகிறார். 38 வருஷமாக

சுகவீனமாக இருந்தவன் (யோவான் 5) குருடனாக பிறந்தவனை சுகப்படுத்துதல் (யோவான்9) லாசருவை உயிரோடு எழுப்புதல் (யோவான் 11) மற்றும் திரளான மீன்களை பிடித்தல் (யோவான் 21)

குருடனாக பிறந்த இவனை சுகப்படுத்தும் அற்புதம் வேறு எந்த சுவிசேஷ எழுத்தாளனாலும் சொல்லப்படவில்லை. எருசலேம் வேதகாலத்தில் வாசல் அருகே இந்த அற்புதம் நடந்தது. இந்த அற்புதம் நடத்தப்பட்ட விதம் சற்று வித்தியசமானது, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்த சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்கிறார். கண்ணிரண்டும் இருண்டு போயிருக்கும் இவனிடம் இப்படிச் சொல்வது எதிர்பாராத ஒன்றாக இருக்கிறது.

எனக்கன்பான வாலிபர்களே! இயேசு எதையும் எடுத்த எடுப்பிலே நமக்கு கொடுத்துவிடுவதில்லை. பிறப்பில் குருடனாக இருந்த ஒருவன் உலகில் ஒளி என்றால் என்னவென்று அறிந்து கொள்வது அத்தனை எளிதாக கிடைத்து விடுமா! இயேசு நினைத்திருந்தால் ஒரு வார்த்தையில் அவனை குணமாக்கி இருக்கலாம். ஆனால், அங்கு அவனுடைய விசுவாசத்திற்கு ஓர் பரீட்சையாய் நமது ஆண்டவர் வைக்கிறார். உமிழ்நீர் பொதுவாக அருவருப்பை தானே உண்டாக்கும், அடுத்தது சேற்றை உண்டாக்கி பூசுகிறார். இது எதற்குமே அந்த குருடன் தடை சொல்லவில்லை. என்ன இயேசுவே இப்படி செய்கிறீர்? என்று கேட்கவுமில்லை. அத்தோடு ஒரு கட்டளை வேறு, ஸீலோவாம் குளத்திலே நீ போய் கழுவு என்று.

எனக்கருமையான வாலிபனே! இந்தக் குருடன் சாக்குப் போக்கு சொல்ல வேண்டும் என்றால் இது தான் சரியான தருணம்! என்ன ஆண்டவரை நீர் இப்படி சொல்லலாமா! நானோ கண்ணிரண்டும் தெரியாதவன் ! எப்படி நான் குளத்தை தேடி செல்வேன். யார் எனக்கு உதவுவார்? ஆதரவு அற்று நிற்கும் என்னை இப்படி அலையவிடலாமா? அதுவும் நான் தண்ணீர் எடுக்க சென்று இடறி விழுந்தால் உள்ளதும் போய்விடுமே என்றெல்லாம் அவன் சாக்கு சொல்லியிருக்கலாம். ஆனால் அவனோ விசுவாசத்தில் உறுதியாக சென்றான். சென்றவன் குளத்தில் கழுவினான், அவனுடைய கண்கள் இரண்டிலும் ஒளி பிறந்ததால் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருக்கெடுத்தது.

எனக்கன்பானவர்களே! இவனுடைய விசுவாசம் படிப்படியாக வளர்ந்ததை நாம் காண முடியும். குணமாக்கப்பட்ட அவனை மற்றவர்களை கண்டு வியந்து, விழியில் ஒளியில்லாதிருந்து வழியறியாத நீ எப்படி சுகம் பெற்றாய் என வினவினபோது முதலில் அவன் விளம்பியதைப் பாருங்கள்,

"இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி என் கண்களின்மேல் பூசி, நீ போய் லீயோவாம் குளத்தில் கழுவு என்றார்" என்றான் (21:11) இந்த இடத்தில் நாம் காணும் போது, இயேசுவின் பெயரை சொல்லுவதையும், அந்த அளவிலேயே அவரை அறிந்நதிருப்பதையும் நாம் காணலாம், ஆனால், அதற்கு பின் கிறிஸ்துவை பற்றிய அவனின் விசுவாச அளவு அதிகரித்திருப்பதை நாம் காணலாம். சனகரீம் சங்கம் அவனை பார்த்து நீ எப்படி பார்வையடைந்தாய் என்றும் வியப்பு மிகுந்த வினாவை கேட்ட பொழுது, என் கண்களில் மேல் சேற்றைப் பூசினார் **கழுவினேன் காண்கிறேன்** என்றான், ஆனால் மீண்டும் அவனிடம் கண்களைத் திறந்தவரை பற்றி நீ நினைப்பதென்ன என்ற போது "அவர் தீர்க்கதரிசி" என்றான். ஒரு வேளை கண்களைத் திறந்தவர் சாதாரண மனிதானாக இருக்க முடியாது என்று சில நேர யோசனைக்கு பின் வந்திருக்கக் கூடும். அவனுடைய விசுவாச வளர்ச்சியின் சிகரம் வசனம் 38-ல் நன்றாக தெரிகிறது. இயேசு அவனிடம் உன்னுடனே பேசுகிற அவர்தான் கிறிஸ்து என்றபோது, உடனே, "ஆண்டவரே விசுவாசிக்கிறேன்". என்றான்.

## அவனுடைய தைரியம்

பிறவியிலே குருடனாயிருந்து இயேசுவானவரால் ஓய்வு நாளில் குணமாக்கப்பட்ட குருடனைக் கண்ட சிலர் அவனை பரிசேயரிடத்தில் கொண்டு போனார்கள். பரிசேயர்களும் ஓய்வு நாளில் இவன் சொஸ்தமடைந்திருப்பதைக் கண்டு நமதாண்டவராகிய இயேசுவைப் பற்றி அவர் தேவனிடத்திலிருந்து வந்தவரல்ல என்றார்கள். சிலரோ தேவனிடத்திலிருந்து வரவில்லையென்றால் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படி செய்ய முடியும் என்று வினவினார்கள். இதனால் அவர்களுக்குள் பிரிவினை உண்டாயிற்று. அப்படி பிரிவினை உண்டானபோது தான் அவனைப்பார்தது உன் கண்களை திறந்தவரைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்று கேட்டபோது, பிரிவினை உண்டானதினால் என்ன சொல்வதென்று திகைத்து நிற்கவில்லை.

எனக்கன்பான வாலிபர்களே! அந்த குருடன் இவர்களுக்குள் பிரிவினை உண்டாகி விட்டது, இனி யார் பக்கம் சேர்வதென்று முடிவெடுக்க வேண்டுமே, நமக்கேன் இந்த பொல்லாப்பு பொதுவான கருத்தை சொல்லி விட்டு போய்விடுவோமென்று எண்ணாமல், ஸீலோவாமில் கண்களை கழுவி குணம் பெற்றவன் அவர்களிடமிருந்து நழுவாமல் "அவர் தீர்க்கதரிசி" என்று பதிலளித்தார். இவனை விசாரித்தது போதாதென்று இவன் பெற்றோரையும் விசாரித்தார்கள் அவர்களோ இவன்

எங்கள் மகன் தான், பதில் சொல்லும் வயது அவனுக்கு இருக்கிறது அவனிடமே கேட்டுவிடுங்கள் என்று மிக பவ்வியமாய் பதுங்கிவிட்டார்கள்.

இரண்டாம் தரம் அவனை அழைத்து, உன் கண்கள் திறந்ததெப்படி? என்று கேட்டபொழுது, முன்னமே உங்களுக்கு சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள், மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்கு சீஷராக உங்களும் மனதுண்டோ என்று பதிலுரைத்து அவர்கள் மனத்திரையைக் கிழித்தெறிந்தான். அத்தோடு அவர் என் கண்களை திறந்திருக்கிறதினால் அவர் வந்திருக்கும் இடம் தேவனிடமிருந்துதான் என்றும் வெளிப்படையாய் கூறிவிட்டான், விளைவு? சனகெரிப் சங்கத்தினால் ஒதுக்கி வைக்கப்படுகிறான். அவர்களை பொறுத்த அளவில் அவனுக்கும் தேவனுக்கும் உறவில்லை. இவர்களால் இப்படி செய்யமுடியும் என அறிந்திருந்தும் அவன் இயேசுவுக்காய் தைரியமாய் குரல் கொடுத்தான்.

எனக்கன்பானவர்களே இயேசு அவனை அப்படியே விட்டு விட்டாரா? இல்லை, தேவலாயத்தில் அவனைக் காண்கிறார் என்னை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறாயா என்றார். தேவாலயத்திலிருந்து உன்னை அவர்கள் விலக்கி வைத்தார்கள். அதை விட பெரியவர் இங்கே நான் இருக்கிறேன் என்று விளம்புவதைப் போல் கேட்டார். அவனும் ஆண்டவரே விசுவாசிக்கிறேன் என்றான். நாமும் இயேசுவின் மீது விசுவாசம் வைத்து எதிர்ப்பின் மத்தியிலும் அவருக்காய் குரல் கொடுத்தால் அவர் நம்மை விட்டு விலகமாட்டார்.

**ஜே. பிக்கின்ஸ்**

## யெகொவாவை எப்படிப் பின்பற்ற வேண்டும்

I பேதுரு 1:16 — யெகொவாவின் பரிசுத்தத்தை பின்பற்ற வேண்டும்.

மத்தேயு 5:38 — யெகொவாவின் பூரணத்தை பின்பற்ற வேண்டும்.

மத்தேயு 6:12 — யெகொவாவைப் போல் மன்னிக்கும் குணமுடையவர்களாக இருக்க வேண்டும்.

யாக்கோபு 2:13 — யெகொவாவைப் போல் இரக்க குணமுடையவர்களாயிருக்க வேண்டும்.

# II பேதுரு ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் : சீமோன் பேதுரு**

**காலம் : சுமார் கி.பி. 66 (அ) 67**

**<u>இந்நூல் பற்றி</u>**

1. தனது முதலாவது நிருபத்தை யாருக்கு எழுதினாரோ, அதே கிறிஸ்தவர்களுக்குத் தான் இந்த இரண்டாம் நிருபத்தையும் எழுதியுள்ளார். (II பேது 3:1)
2. இரண்டுமே பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களில் சிதறியிருக்கிறவர்களுக்கே எழுதப்பட்டது.
3. இந்நிருபம் எங்கிருந்து, எப்பொழுது எழுதப்பட்டது என்பதைத் தீர்மானிப்பது மிகவும் கடினமான ஒன்று.
4. இந்த இரண்டாம் நிருபம் கள்ளப்போதகர்களுக்கு எதிராக எச்சரித்து எழுதப்பட்டுள்ளது.
5. இந்நூலின் முக்கியமான வார்த்தை "அறிவு"
6. கள்ளப்போதகங்களுக்கு எதிராக காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரே வழி "வேதவசனங்களின் அறிவு" என்பதே வலியுறுத்தப்படுகிறது.

**இந்நூலின் செய்தி**

1. நாம் இரட்சிக்கப்பட வேண்டுமெனில், கிறிஸ்தவ கிருபைகளை நம்முடைய வாழ்க்கையில் கூட்டி வழங்குவது அத்தியாவசியம் (1:5-11)
2. விசுவாசமுள்ளவர்களை வழிவிலகிப்போகச் செய்யும்படியாய் கள்ளப்போதகர்கள் இருந்திருக்கிறார்கள், இப்பொழுதும் இருக்கிறார்கள், இனியும் இருக்கப்போகிறார்கள் (2:1-19)
3. ஒரு தேவனுடைய பிள்ளை கிருபையிலிருந்து விழுந்துபோக முடியும். (3:9,10)
4. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, பூமியானது அழிந்துபோகும், ஆகவே, ஆயிரம் வருட அரசாட்சிக்காரர்கள் சொல்லுவது போல், பூமியிலே அரசாட்சி இருக்கிறது (3:10-12)
5. எல்லா மனிதரும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டுமென தேவன் விரும்புகிறார் (3:9)
6. வேத வசனங்களைப் புரட்டி, அதற்கு தவறான பொருள் கொடுப்போமானால் நாம் இழந்து போவோம் (3:18)

சிறுவர் பகுதி

# கீழ்ப்படியாத பெரிய மனிதர்


எனக்குப் பிரியமான சிறு தம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன். சிறுவர்பகுதியின் மூலம் நீங்கள் பயனடைந்து வருவீர்கள் என நம்புகிறேன். சரி, இம்மாதம் நாம் ஒரு பெரிய மனிதரைக் குறித்து படிக்கப்போகிறோம். சரி, அது யார் என்று பார்ப்போமா?.

தேவன், தம்முடைய ஜனங்கள் அடிமைப்பட்டிருந்த எகிப்து தேசத்திற்கு வாதைகளை அனுப்பினார். அதன் பின் பார்வோன் ராஜா தேவனுடைய ஜனங்களை விடுவித்தான். அதற்குப்பின் தேவனுடைய ஜனங்கள் தேவனால் வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்ட கானான் தேசத்தை நோக்கி புறப்பட்டுப் போனார்கள். ஆனால், இடையில் என்ன நடந்தது என்று படியுங்கள். உங்களுக்குக் கொஞ்சம் அது அதிர்ச்சியாக இருக்கும்.

ஜனங்களெல்லாரும் "மோசே" என்ற மனிதரின் தலைமையில் போய்க்கொண்டிருந்தார்கள். அவர் பன்னிரெண்டு மனிதர்களை கானான் தேசத்திற்குள் வேவு பார்க்கும்படி அனுப்பியிருந்தான். அதில் பத்து பேர், தேவன் மேல் விசுவாச மில்லாதவர்களாய் கானானியரை எதிர்கொள்ள முடியாதென்று கூறினார்கள். ஆனால் மற்ற இரண்டு பேரும் விசுவாச முள்ளவர்களாய் தேவன் அதை நமக்கு தருவார் என்றனர். அவர்கள் யார் தெரியுமா? காலேபும், யோசுவாவும் தான்!

சரி, இடையில் என்ன தான் நடந்தது ? தொடர்ந்து படியுங்கள். அப்பொழுது இருந்த தேவனுடைய ஜனங்கள் தொடர்ந்து குறை சொல்லிக் கொண்டும், முறுமுறுத்துக்கொண்டும் இருந்தார்கள். ஏனென்றால், அவர்களுக்கு தண்ணீரும், உண்ண உணவும் கிடைக்கவில்லை. அப்படி ஜனங்கள் முறுமுறுத்த ஒரு சமயத்தில், தேவன் மோசேயைப் பார்த்து, நீ கன்மலையைப் பார்த்து பேசு. அப்பொழுது அது தன் தண்ணீரை கொடுக்கும் எனக் கூறியிருந்தார். ஆனால் ஜனங்கள் அதிகமாக முறுமுறுத்தபடியினால் அவன் பொறுமையிழந்து கன்மலையை தன் கோலினால் அடித்தான். அதுதன் தண்ணீரை கொடுத்தது. ஆனால் அவன் செய்த காரியம் தேவனுடைய கற்பனையை மீறின செயலாயிருந்தது. ஏன்?

ஏனெனில், மோசே என்ன செய்ய வேண்டுமென்று தேவன் தெளிவாகச் சொல்லியிருந்தார். மோசே தேவன் தனக்கு கொடுத்த கட்டளையை மீறினான். அதினால், கோபம் கொண்டார்.



அப்பொழுது மோசேயிடம், தேவன் என்ன கூறினார் என்று பாருங்களேன்! எண் 20:12-ல், தேவன் மோசேயைப் பார்த்து இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னை பரிசுத்தம் பண்ணும்படி நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்த சபையாருக்கு நான் கொடுத்த தேசத்திற்குள் நீ அவர்களை கொண்டு போவதில்லை என்று கடிந்து கொண்டார். மோசேவுக்கு இது எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்.

மோசே தான் செய்த தவறுக்கு ஏற்ற தண்டனையை பெற்றான். இஸ்ரவேல் ஜனங்களை பல வருடம் விசுவாசத்தோடே நடத்தினபோதும், அவனால், தேவன் வாக்கு கொடுத்த தேசத்தை சுதந்தரிக்க முடியவில்லை. அவன் தேவனிடத்தில் கெஞ்சினான். (உபா 3:23-25) ஆனால், தேவன் அவன் மன்றாட்டைக் கேட்கவில்லை.

தேவன் மோசேயிடம் நீ நேபோ மலை மீது நின்று வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்தை "பார்த்துக் கொள்" என்றார். மோசே அங்கு மரித்தான். தேவன் அவனை அடக்கம் பண்ணினார்.

பாருங்கள்! தேவனுக்கு பிரியமாக வாழ்ந்தவன் ஒரே ஒரு தவறினாலே தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்குள் போக முடியவில்லை. அப்படியானால் நாம் இச்சிறு பிராயத்திலிருந்தே எவ்வளவு கவனமாய் தேவ காரியங்களில் இருக்க வேண்டுமென்று பாருங்கள்.

தேவ கட்டளையை அப்படியே ஏற்று நடக்கும் பழக்கம் எடுத்த எடுப்பிலே வந்து விடாது. இச்சிறு பிராயத்திலிருந்தே நாம் ஒவ்வொருவரும் நம்மை அதற்காக பயிறுவிக்க வேண்டும். அப்பொழுது தான் தேவ ஆசீர்வாதத்தோடு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைப் பெற்று வாழ முடியும். அப்படி நாம் முயற்சி செய்வோமா?.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

**வே**தாகமத்தின் அதிகாரம் மற்றும் ஏவுதல் பற்றி நாம் படித்துக் கொண்டு வருகிறோம். இதுவரைக்கும் நாம் கீழ்க்கண்ட கேள்விகளுக்கான பதிலைப்படித்திருக்கிறோம். 1. ஆவிக்குரிய நிலையில் நம்முடைய அதிகாரத்தின் அளவு கோல் எது? 2. வேதாகமம், தேவனால் ஏவப்பட்ட வார்த்தை என்று நாம் சொல்லுவதின் பொருள் என்ன? 3. வேதாகமத்தின் சாட்சி அல்லாமல், வேதாகமம் தேவனால் ஏவப்பட்டதென்று நம்புவதற்கு வேறு காரணங்கள் உண்டா? 4. தேவனுடைய வார்த்தைகளடங்கிய வேதாகமம், ஆவிக்குரிய நிலையில், நம்முடைய அதிகாரத்திற்கான அளவுகோல் என்று ஏற்றுக்கொள்வதற்கு வேறு மாற்று என்ன இருக்கிறது?

இந்த மாதத்தில், வேதாகமத்தின் ஆளுகை அமைப்பு பற்றி உங்களோடு படிக்க விரும்புகிறேன். வேதாகமம் 66 புத்தகங்களை கொண்டிருக்கிறது. அவைகளில் 39 பழைய ஏற்பாட்டையும், 27 புதிய ஏற்பாட்டையும் ஏற்படுத்துகிறது.

பழைய ஏற்பாட்டை நான்கு வகையாகப் பிரிப்பதை ஜனங்கள் பொதுவாக ஏற்றுக்கொள்கின்றனர். இந்தப் பிரிவுகள் ஏவப்பட்டவைகள் அல்ல, ஆனால் சபையின் ஆளுகை அமைப்பு பற்றி நம்முடைய மனதிலே சுலபமாக இருத்திக்கொள்வதற்கு நமக்கு உதவும் நல்ல வழிகளாக இருக்கிறது.

நியாயப்பிரமாணப் புத்தகங்கள் 5 (ஆதி-உபா); சரித்திர புத்தகங்கள்-12 (யோசுவா-எஸ்தர்); பாடல் புத்தகங்கள்-5 (யோபு-உன்னதப்பாட்டு); தீக்கதரிசனப் புத்தகங்கள்-17 (ஏசாயா-மல்கியா); தீர்க்கதரிசனப் புத்தகங்கள்-17-ஐ “பெரிய தீக்கதரிசனங்கள்-5” (ஏசாயா-தானியேல்) என்றும், சிறிய தீக்கதரிசனங்கள்-12 (ஓசியா- மல்கியா) என்றும் பிரிப்பதுண்டு, ஏசாயா-தானியேல் பெரிய தீர்க்கதரிசனங்கள் என்று அழைக்கப்படுவதற்குக் காரணம், அவைகள் அதிக பக்கங்களைக் கொண்டிருப்பது தானே தவிர, மற்றபடி, ஓசியா-மல்கியா தீர்க்கதரிசனங்கள் போன்றவைகளைக் காட்டிலும் முக்கியம் என்பதால் அல்ல.

அதுபோலவே, புதிய ஏற்பாட்டையும், நான்கு பிரிவுகளாக அங்கீகரிக்கலாம். நான்கு **நற்செய்தி** நூல்கள் (மத்தேயு-யோவான்) கிறிஸ்துவின் வாழ்க்கைப் பற்றி இவைகள் முக்கியமாகப் பேசுகிறது. ஒரே ஒரு **சரித்திர புத்தகம்** (அப்போஸ்தலர்) நடபடிகள் புத்தகத்தில், ஒருவன் எப்படிக் கிறிஸ்தவனாக மாறுவது என்று தேவன் சொல்லுகிறார்,

**நிருபங்கள்** 21 உண்டு (ரோமர்-யூதா) ஒருவன் எப்படி கிறிஸ்தவனாக **வாழ்வது** என்று இந்த நிருபங்களில் தேவன் வெளிப்படுத்தியுள்ளார். பிறகு ஒரு **தீர்க்கதரிசனப்** புத்தகம் (வெளிப்படுத்தின விசேஷம்) சவாலான இந்நூலில், ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனின் **நம்பிக்கை** பற்றிய காரியங்களை வெளிப்படுத்துவதற்கு உருவக மொழியை பயன் படுத்துகிறார்.

பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும் இருப்பதை நாம் படிக்கும் போது, நமக்குள்ளாக ஒரு கேள்வி இயல்பாகவே வருகிறது. அது, நாம் **எந்த ஏற்பாட்டின் கீழ் வாழ்கிறோம் என்பதும், எந்த ஏற்பாட்டுக்குக் கீழ்ப்படிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்?** என்பதுமே அது.

இந்தக் கேள்வி இயல்பானது மாத்திரமல்ல, இதற்கான தேவ பதில் என்ன என்பதைத் தீர்மானிக்கும் காரியத்தில் மிகவும் முக்கியமானதும் கூட.

காலங்காலமாக, மனிதர்களால் தோன்றுவிக்கப்பட்ட வித்தியாசமான பிரிவுச் சபைகளில் இருந்து, நாங்கள் இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்களிடம் நாம் காண்பவைகளை எண்ணிப்பாருங்கள். உதாரணமாக, ஒரு கூட்டத்தார், ஓய்வு நாளை பரிசுத்தமாக (சனிக்கிழமை) அனுசரிக்க வேண்டுமென்றும், அந்த நாளில் ஆராதிக்க வேண்டுமென்றும் போதிக்கின்றனர், வேறு சிலர், பத்துக் கட்டளைகள் நம்மை இன்னும் கட்டுப்படுத்துகிறதாக உள்ளது என்று சொல்லுகின்றனர்.

அப்படிப்பட்ட போதனைகள் சரியா, தவறா என்று நானும், நீங்களும் வேத வாக்கியங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டுமென தேவன் எதிர்ப்பார்க்கிறார்.

அப்படிச் செல்வதற்கு, முதலில், பழைய ஏற்பாடு பற்றிய சில முக்கியமான காரியங்களைப் படிப்போம்.

a) பழைய ஏற்பாடு, நியாயப்பிரமாணம் (யோசுவா 1:17, உபா 4:44) என்றும் உடன்படிக்கை (யாத் 34:27) என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

b) இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்தபோது, சீனாய் மலையில், தேவனுக்கும், இஸ்ரவேலருக்குமிடையே ஏற்படுத்தப்பட்டது (யாத் (19:1-5)

c) அது, இஸ்ரவேல் தேசத்தாருக்கும் **மட்டுமே** கொடுக்கப்பட்ட ஒரு **தேச** சட்டம், அல்லது பிரமாணம்.

1. (யாத் 19:3.6) - "இஸ்ரவேல் புத்திரருக்கு" தேவன் அதைக் கொடுத்தார்.

2. யாத் 34:27 - இந்த உடன்படிக்கைகளைத் தேவன் மோசேயோடும், இஸ்ரவேலரோடும் ஏற்படுத்தினார்

3. உபா 5:1 - இந்த கட்டளைகளையும் நியாயங்களையும் எல்லா இஸ்ரவேலர்களுக்கும் கொடுத்தார்.

4. உபா 4:8 - வேறு எந்த தேசத்திற்கும் அல்லது ஜனத்திற்கும் இப்படிப்பட்ட கட்டளைகளும், நியாயங்களும் இருக்கவில்லை.

d) இதில் பத்துக் கட்டளைகளும் உள்ளடங்கினதாக இருந்தது (யாத் 20:3-17, 34:28)

e) இது வாக்குத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் (கலா 3:19) **ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டது.**

f) தேவன் இதை எடுத்துப் போட்டு, புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவார் என்று வெகு காலத்திற்கு முன்பே தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருக்கிறது. (ஏரே 31:31-34)

தேவ ஆவியானவர் ஏவப்பட்டு எழுதின எபிரெய ஆசிரியரைக் கொண்டு இந்த தீர்க்க தரிசனம் புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட்டது என்று, தேவன் சொல்லியுள்ளார். (எபி 8:6-13, 10:16,17)

g) இயேசு இதை நிறைவேற்றும்படி வந்தார் (மத் 5:17) (லூக் 24:25-27,44-48)

h) இயேசு அதை நடுவிலிராதபடி எடுத்துப்போட்டு, அதை சிலுவையில் ஆணியடித்துப்போட்டார் (கொலோ 2:14-16)

i) இயேசு கிறிஸ்துவினுடைய புதிய ஏற்பாடு, அவருடைய மரணத்தின் மூலம் செயலாக்கம் பெற்றுவிட்டது என்று சொல்லுவது சரியாக இருக்கும். இதன் மூலம் பழைய ஏற்பாடு நீக்கப்பட்டது (எபி 9.15-17)

j) ரோமருக்கு எழுதின நிருபத்தில், அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு கீழ்க்காண்பவைகளைச் சொல்லியுள்ளார்.

1. கிறிஸ்தவர்கள் பழைய பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல (6:15)

2. கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாயிருக்கிறார்கள் (7:4) (கலா 1:19யும் பார்க்கவும்.)

3. கிறிஸ்தவர்கள் பழைய பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள் (7:6)

4. 7-ம் வசனத்தின்படியாக, கிறிஸ்தவர்கள் கீழ்ப்பட்டிராத, கிறிஸ்தவர்கள் மரித்தவர்களாயிருக்கிற, கிறிஸ்தவர்கள் விடுதலையாக்கப்பட்டிருக்கிற பிரமாணம், இச்சியாதிருப்பாயாக என்ற கட்டளையைக் கொண்டுள்ளது. யாக் 20:17-ன் படி பத்துக்கட்டளைகளில் இது கடைசி கட்டளை என்று பார்க்கிறோம். ஆகவே, பத்துக்கட்டளைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பழைய பிரமாணத்திற்கு கிறிஸ்தவர்கள், கீழ்ப்பட்டிராமல் அவைகளுக்கு மரித்து அதிலிருந்து விடுதலையாக்கப் பட்டிருக்கிறார்கள் என்று திட்டமாகச் சொல்லுகிறார்.

k) இரண்டாவதை (புதியதை) நிலைநிறுத்துவதற்கு முதலாம் உடன்படிக்கை (பழையதை) கிறிஸ்துவினாலே நீக்கிப் போடப்பட்டது.

l) நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களை, கிறிஸ்து மீட்டார் (கலா 3:13)

M) மேற்கண்ட வசனங்களிலிருந்து, பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கையானது, **இன்றைக்குப் பிரமாணமாக நம்மை கட்டுப்படுத்துவதில்லை என்பது தெளிவாகிறது** நாம், அடுத்து படிக்கப்போகின்ற, இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டைக் கொண்டு நீக்கிப்போடப்பட்டது.

N) அதற்கு முன்பாக, பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை பற்றி நாம் கண்டவைகளைத் தொகுத்துப்பார்ப்போம்.

1. அது நியாயப்பிரமாணம் என்றும் உடன்படிக்கை என்றும் அழைக்கப்பட்டது.
2. அது, தேவனுக்கும், இஸ்ரவேலருக்கும் இடையிலானது
3. அது தேச சட்டம்
4. அது பத்துக்கட்டளைகளைக் கொண்டிருந்தது.
5. அது, சந்ததி வருமளவும், **ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான்** அந்த சந்ததி இயேசு கிறிஸ்து
6. அதை **நீக்கிப்போடுவேன்** என்று தேவன் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்.
7. இயேசு, அதை நிறைவேற்ற வந்தார்.
8. அதை நடுவிலிராதபடி நீக்கிப்போட்டு, சிலுவையில் ஆணியடித்தார்.
9. அவருடைய மரணத்தில் அது மாற்றப்பட்டது.

10. அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு, ரோமபுரியாருக்கு எழுதினபோது கிறிஸ்தவர்கள் அதற்குக் கீழானவர்களல்ல என்றும், அதற்கு மரித்து, அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தேவன் சொன்னார்.

11. இரண்டாவதை நிலைநிறுத்தும்படியாய் முதலாவது, நீக்கிப்போடப்பட்டது.

12. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களை, கிறிஸ்து நியாயப் பிராமணத்தின் சாபத்திலிருந்து விடுதலையாக்கினார்.

**13. முடிவுரை :**

பழைய ஏற்பாடு, ஒரு சட்டமாக இன்றைக்கு நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டைக் கொண்டு அது மாற்றப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாடு (உடன்படிக்கை) எப்படிப்பட்டது?

எபி:9.15-படி, இயேசு, இதன் மத்தியஸ்தராயிருக்கிறார். பழைய உடன்படிக்கையின், மத்தியஸ்தராகிய மோசேயைக் காட்டிலும், இவர் மேம்பட்டவராக இருக்கிறார். (கலா: 3:19; உபா:5:5) மேலுமாக; எபி 7.:22-ல் தேவன் புதிய உடன்படிக்கையாகிய ஏற்பாடு **மேலானது,** அல்லது விசேஷமான ஒன்று என்று தேவன் சொல்கிறார். ஏன்? ஏனெனில், இது விசேஷித்த வாக்குத்தத்தங்களை அடிப்படையாகக் கொண்டது (8:6) **நன்மையான நம்பிக்கையை** வருவிக்கிறது (7:19). இது **விசேஷித்த பலியோடே** சம்பந்தப்பட்டிருக்கிறது (எபி: 10:10) அந்த **விசேஷித்த பலியானது,** கிறிஸ்துவின் சரீரமாக ஒரே தரம் பலியிடப்பட்டிருக்கிறது.

அந்த விசேஷித்த பலியானது **நித்திய** உடன்படிக்கையாயிருக்கிறது. (எபி: 13:20) ஆகையால், அது நீக்கிப்போடப்பட்டது. அது மனிதனுக்கான தேவனுடைய **இறுதி** வெளிப்பாடாக இருக்கிறது.

அந்த புதிய ஏற்பாடு அல்லது உடன்படிக்கையானது, **கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தோடு** சம்பந்தப்பட்டதாயிருக்கிறது (எபி: 10:29) புதிய ஏற்பாட்டின் அந்த இரத்தமானது **பாவமன்னிப்புக்காகச் சிந்தப்பட்டது** (மத்:26:28).

அப்படியானால், இதன் பொருள், பழைய ஏற்பாடு நமக்கு எந்த வகையிலும் பயனற்ற ஒன்று எனப் பொருளாகுமா? இல்லை! இது நமக்குப் போதனையாக எழுதப்பட்டிருக்கிறது. (ரோம 15:4) இவைகள் நமக்கு திருஷ்டாந்தமாகவும், எச்சரிப்பாகவும் எழுதப்பட்டிருக்கிறது (Iகொரி : 10:6,11) அந்தப் பழைய ஏற்பாடு, ஒரு சட்டமாக இருந்து இன்று நம்மைக்

கட்டுப்படுத்துவதில்லை. நாம், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டின் கீழாக உள்ளோம். நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப்படைவது எப்படி என்றும், எப்படிக் கிறிஸ்தவனாக வாழ்வது என்றும் தேவனை எப்படி முறையாக ஆராதிப்பதென்றும், ஆவிக்குரிய ரீதியில் முக்கியமாக இருக்கும் ஒவ்வொரு கேள்விக்கும் எப்படி பதில் அளிப்பது என்றும் நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டுக்குப்போய் தான் கற்றுக் கொள்கிறோம்.

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தராக, இருக்கிறாரென்பதற்காக, நாம் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியுள்ளவர்களாகவும், நன்றியுடையவர்களாகவும் இருக்க வேண்டும். அதாவது, புதிய ஏற்பாடானது **விசேஷித்த** வாக்குத் தத்தங்களை அடிப்படையாகக் கொண்ட **விசேஷித்த** உடன்படிக்கையாயிருந்து, **விசேஷித்த** பலியைக் கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, அது நித்திய உடன்படிக்கையாகவும் இருக்கிறது. இதற்காக, நாம் ஒவ்வொருவரும், இயேசுவுக்கும், அவருடைய புதிய ஏற்பாட்டிற்கும் கீழ்படியும்படியாய், நம்முடைய முழு பலத்தோடும் முயற்சி செய்வதன் மூலம் நம்முடைய நன்றியறிதலைக் காட்டுவோமாக!

அடுத்த மாதம், இரண்டு கேள்விகள் குறித்துப் பார்க்க நாம் திட்டம் வைத்திருக்கிறோம். தேவனுடைய வார்த்தைகளுக்கு நாம் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? அப்படி முக்கியத்துவம் கொடுப்பது ஏன் முக்கியமானது? எங்களோடு சேர்ந்து அதைப்படிக்க, தயவு செய்து ஆயத்தமாயிருங்கள்.

**EZSR** **CHARLIE DI PALMA**

## சிறந்த சபை

- எதிர்காலத்தைப் பற்றி திட்டங்களை தீட்டும்
- தேவன் பேரிலும், அவர் தந்த வாக்குதத்தின் பேரிலும் விசுவாசம் கொள்ளும்
- ஜெபம் மிகவும் முக்கியம் என்று நம்பும்
- தேவனுடைய ராஜ்யத்தின் பணி செய்ய முழு மனதுடன் சம்மதம் சொல்லும்
- கர்த்தருடைய வேலையில் ஒற்றமையின் ஆவி உடையதாயிருக்கும்.
- மற்றவர்களின் தேவையை பார்த்து மனதுருகும்
- ஆத்தும பாரம் கொண்டதாக இருக்கும்
- தேவனுடைய வார்த்தையின் பேரில் மிகுந்த வாஞ்சையுடன் இருக்கும்.

# தேவ ஒத்தாசை வேண்டுமா ?

மனிதர் எல்லோருமே மற்றவருடைய உதவி அல்லது ஒத்தாசையோடு தான் வாழ முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அவனுடைய சக்தி ஒரு வரையறைக்கு உட்பட்டது. எவ்வளவு தான் செல்வம் இருப்பினும், பதவி செல்வாக்கு இருப்பினும் மனிதனுக்கு மற்றவர் உதவி தேவைப்படுகிறது. ஏனெனில் தேவனே அப்படிப்பட்ட சமுதாய அமைப்பில் நம்மை வாழ அனுமதித்திருக்கிறார். சர்வலோகத்தின் பாவத்தையும் நீக்கி ரட்சிக்கும் வல்லமை பெற்ற நம் ஆண்டவர் இயேசுவும் இவ்வுலகில் மனிதனாக வந்தபோது, தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் விருத்தியடைந்தார். (லூக் : 2:52).

இப்படிப்பட்ட இந்த வாழ்க்கையில் நாம் தேவனுடைய ஒத்தாசை இல்லாமல் வாழவே முடியாது! அது மிகவும் அவசியமானது. தேவனும் நமக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார். ஆனால், அவருடைய உதவியைப் பெற நாம் தகுதியாய் இருக்க வேண்டாமா? எப்படிப்பட்ட தகுதிகள் என்பதை தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய பரிசுத்த வேதம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

தேவனுடைய சுபாவங்களில் ஒன்று அவர் இருதயங்களை ஆராய்ந்து பார்ப்பது. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். ஆபேல் தேவனுக்கென்று காணிக்கை கொண்டு வந்தான். காயீனும் கொண்டு வந்தான். ஆனால் தேவன் ஆபேலின் காணிக்கையை மட்டும் அங்கீகரித்தார். ஏன்? ஆபேல் முழுமனதோடு சிறப்பானதை தேவனுக்கு தர வேண்டும் என நினைத்தான். அந்த உள்ளான முழு இருதயத்தையே தேவன் அங்கீகரிக்கின்றார். எனவே தான் நியாயப்பிரமாணத்தில் பிரதானமாக முழு இருதயத்தோடும், முழுமனதோடும், முழு பெலத்தோடும் அன்பு கூற வேண்டும் என்ற கட்டளையை மனிதனுக்குக் கொடுத்தார். ஆண்டர் இயேசுவும் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடச் சொன்னார். எனவே, நாமும் நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுத்து நம் கைகளுடைய பிரயாசத்தினால் தேவனைக் கனம் பண்ணி அவருடைய ஒத்தாசையைப் பெறும் தகுதியடைவோம்.

தேவனுடைய உதவியைப் பெற்றதில் மிகவும் விசேஷித்தவர் நோவா எனலாம். தாம் படைத்த உலகம் அக்கிரமத்தினால் நிறைந் திருந்ததால் தேவன் அதை முழுவதுமாக வெள்ளத்தினால் மூழ்கடித்து

அழிக்க ஆயத்தமானார். அந்த வேளையில், பரீட்சையில் "ஸ்டேட் பர்ஸ்ட்" கிடைத்ததைப் போன்ற இடம் நோவாவுக்கு கிடைத்தது. தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது, ஆம் அவனும் அவன் குடும்பத்தார் மட்டுமே மொத்த உலகை அழிவிலிருந்து தப்பினர். தேவன் ஓர வஞ்சனையுள்ளவரா? ஏன் அவனை மட்டும் தப்புவித்தார்? தாம் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்தாலும் நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். (ஆதி. 6:8,9) நான் எப்படி வேண்டுமானாலும் வாழுவேன் தேவன் எனக்கு உதவி செய்ய வேண்டும் என ஒருவர் எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். நாம் தவறு செய்யும் போது இவ்வுலகத்தின் தகப்பன் நம்மை சிட்சிப்பது எப்படி நியாயமோ! அதுபோல, நாம் சரியில்லையெனில் தேவ ஒத்தாசை கிடைக்காது என்பதைப் புரிந்துக்கொள்ள வேண்டும்.

தேவன் உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார். ஆனால் நாம் தான் அநேக வேளைகளில் அவருடைய உதவியை நாடுவதில்லை. பல நேரங்களில் நமக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் நாம் எதிர்பார்க்கும் நபர்களிடமிருந்து நமக்கு கிடைப்பதில்லை. அது நமக்கு மிகவும் வேண்டியவர்களாய் இருக்கலாம். அல்லது உறவினராக பெற்றோராக, நண்பர்களாக ஏன் ஒரே சரீரமாக இருக்கக்கூடிய கணவனோ அல்லது மனைவியோ இப்படிப்பட்டவர்களிடமிருந்தும் கூட நமக்கு எதிர்பார்த்த நன்மைகள் கிடைப்பதில்லை. ஞாபகப்படுத்திக்கொள்வோம், நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள் எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம் (ஏசா 2:22) நாம் மனுஷர் மீது வைக்கும் நம்பிக்கை தேவனுடைய பார்வையில் முட்டாள்தனமாக உள்ளது. எனவேதான், ஆபத்தில் அவரை நோக்கி கூப்பிடச் சொல்லுகிறார் (சங் : 50:15) யோசேப்புக்கு தன் சொந்த சகோதரர்களால் ஆபத்து வந்தபோதும், அவன் தேவனிடம் நம்பிக்கையாயிருந்தான். அடிமையாய் வேலை செய்த வீட்டில் தன் எஜமான் வீட்டிலே தொடர்ந்து ஆபத்து வந்தபோதும் அவன் சோர்வடையாமல் அவர் மீது நம்பிக்கை வைத்ததினால் தேவன் சிறைச்சாலையிலும் கூட அவனுக்கு எதிர்பாராத இடத்தில் இருந்து தயவு கிடைக்கச் செய்தார் (ஆதி 39:21) என்ன ஒரு ஆச்சரியம்! நமக்கு கூட தேவனுக்கு பயப்படும் பயம் இருக்குமானால் எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும் தேவன் உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார்.

பொதுவாக மோசேயைப் பற்றி வேதத்தில் நாம் பார்க்கும் போது, வாலிபத்தில் அவன் தன் சுய ஜனங்கள் நிமித்தம் ஒரு எகிப்தியனை வெட்டியதும், ஜனங்கள் விக்கிரகாராதனை செய்ததின் நிமித்தம்

தேவனுடைய உடன்படிக்கை பலகைகளை உடைத்ததும், கன்மலையோடே பேசு என்று தேவன் சொன்னபோது அவன் தன் கையின் கோலினால் அடித்ததும் அவனை ஒரு கோபக்காரனாக நாம் எண்ணிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் வேதம் அவனைப்பற்றி சொல்வது மிகவும் ஆச்சரியம். இந்த பூமியில் அவனைப்போல் ஒருவனும் சாந்தகுணத்தில் சிறப்பாக இல்லை என்ற நற்சான்றிதழை வேதமே தரும்போது யார் தான் குறை சொல்ல முடியும்? (எண் 12:13) குடும்பத்தில் நம் பிள்ளைகளை வழி நடத்தவே நம் சாந்தகுணம் போதவில்லை! 6 லட்சம் புருஷர்கள் அடங்கிய சுமார் 12 லட்சத்திற்கும் மேலான மக்கள் கூட்டத்தை வழிநடத்த தேவன் சரியான நபரைத்தானே தேர்ந்தெடுத்துள்ளார்? எனவே, தேவ ஒத்தாசை விரும்பும் அருமையான விசுவாசியே சாந்தகுணத்தை வளர்த்துக்கொள். கோபம் அதிகமாக வெளிப்படும்போது தேவ ஆவியால் நாம் வழிநடத்தப்படவில்லை. அல்லது சுயபுத்தியின் மேல் சாய்கிறோம் என்பதை உணர்ந்து கொள். நம் எஜமான் இயேசுவிடமிருந்து சாந்தகுணத்தையும், தாழ்மையையும் கற்றுக்கொள் (மத்: 11:29) ஒத்தாசை வரும்!.


தாவீது தேவன் மீது வைத்த நம்பிக்கையினாலே அவனுக்கு தேவாலயம் கட்ட வேண்டும் என்ற எண்ணம் உண்டானது. இதுவும் தேவ தயவு (அப் 7.:46) எனக்கு தேவ ஒத்தாசை கிடைக்கும் என்று அவன் பூரணமாக நம்பினான். (சங்: 121:1,2) நம்மிடம் உண்மை இருக்கும்போது அதை நாம் பெறலாம் என சாலமோன் கூறுகிறான். (நீதி: 3:3,4) கிருபையும் சத்தியமும் ஆண்டவர் இயேசுவின் மூலம் உண்டாயிருப்பதால் நாம் மென்மேலும் விசுவாசித்து அவரை பின்பற்றி தேவ ஒத்தாசை பெறுவோம்.

ஆமென்.

**சகோ. பாண்டியன்,**
**அரக்கோணம்.**

## ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!!

**திருமறை தியானம்** தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் சத்தியத்தைக்கேட்டும் அநேகர் கிறிஸ்து வாக்களித்துக் கட்டின ஒன்றான மெய்ச் சபையை அடையாளம் கானவும், வேத வசனங்களின் படி இரட்சிப்படையவும் ஜெபியுங்கள்.



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Litertures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.

ராஜ் டிவி யில்
திருமறை தியானம்
பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணிக்கு

தமிழன் டிவி யில்
திருமறை தியானம்
பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணிக்கு

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.